ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்
முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண்: 2688/மாஒ7/CG/ஒபக/2025 நாள்: 12.05.2025

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – நான் முதல்வன் திட்டம் – கல்லூரிக் கனவு – அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2024–2025ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை நிகழ்வு – நடைபெறும் இடம் மற்றும் ஒன்றியம் சார்ந்த விவரங்கள் தெரிவித்தல் – சார்பு.

பார்வை :
1. Additional Chief Secretary SPI D.O.Letter No.244/OP/2025 dated: 29.04.2025
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.023758/பிடி2/ இ2/2024 நாள்.30.04.2025
3. மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்ற நாள்.07.05.2025

••••••••••

பார்வை 1 மற்றும் 2இல் காணும் செயல்முறைக் கடிதத்தின்படி உயர்கல்வி வழிகாட்டுதல் சார்ந்த அனைத்து அரசு பள்ளிகளில் பயிலும் 10, 11, மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை செய்திட பள்ளிக்கல்வி இயக்கத்தின் வாயிலாக பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக 2024–25ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயின்ற உயர்கல்வி சேர்க்கை அடைவதற்கு சிறப்பு கவனம் தேவைப்படும் என வேலூர் மாவட்டத்தில் 3725 மாணவர்கள் விவரப்பட்டியல் மாநிலத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. மாணவர்கள் அனைவரும் கட்டாயம் கல்லூரிக் கனவு முகாமில் கலந்து கொண்டு உயர்கல்வி நிறுவனங்களில் சேர வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் முதற்கட்டமாக பின்வரும் விவரப்படி பள்ளிகளில் பயிலும் மாணவர்களை கல்லூரிக்கனவு நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, சன்பீம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 14.05.2025 அன்று காலை 9.30 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றவுள்ளது. இந்நிகழ்விற்கு பின்வரும் அட்டவணையில் உள்ள பள்ளிகளில் உள்ள மாணவர்களை காலை 8.30 மணிக்கு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் பொறுப்பு ஆசிரியருடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேருந்தில் பாதுகாப்புடன் அழைத்துவர தெரிவிக்கப்படுகிறது.

| S. NO | NAME OF THE BLOCK | NO OF STUDENTS | VENUE | EVENT DATE |
|---|---|---|---|---|
| 1 | KATPADI & VELLORE URBAN | 1447 | SUNBEAM MATRIC HS SCHOOL, KATPADI. | 14.05.2025 |

இணைப்பு : கலந்து கொள்ள வேண்டிய
பள்ளிகளின் பெயர் பட்டியல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர், (பொ)
வேலூர்.

பெறுநர்,
சார்ந்த மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்,
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி, தொடக்கக்கல்வி, தனியார் பள்ளிகள்)
மாவட்டக் கல்வி அலுவலகம்,
வேலூர்.